**செ.வெ.எண்: 534** **நாள்: 24.09.2021**

**புதுக்கோட்டை மாவட்டத்தில்**

**சமுதாய விழிப்புணர்வு கலைப் பயண நிகழ்ச்சியை**

**மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.**

---

புதுக்கோட்டை புதிய பேருந்து நிலையத்தில் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, புதுக்கோட்டை மாவட்டம் பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வித் திட்டம் சார்பில் சமுதாய விழிப்புணர்வு கலைப் பயண நிகழ்ச்சியை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் இன்று (24.09.2021) துவக்கி வைத்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது;

பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி திட்டத்தின்கீழ் செயல்படும் கற்போம் எழுதுவோம் இயக்கம் சார்பில் புதுக்கோட்டை மாவட்டத்தில் முதல் கட்டமாக 394 மையங்களில் 7,949 கல்லாதோர்க்கு மூன்று மாதம் பயிற்சி அளிக்கப்பட்டது. தொடர்ந்து 29.07.2021 முதல் 31.07.2021 வரை மூன்று நாட்களுக்கு 7,954 நபர்களுக்கு மதிப்பீட்டு முகாம் நடத்தப்பட்டது.

மேலும் 15 வயதிற்கு மேற்பட்டோரில், "எழுத, படிக்கத் தெரியாதவர்" எவரும் இருக்கக் கூடாது என்ற நோக்கில் தமிழக அரசு இந்த விழிப்புணர்வு கலை நிகழ்ச்சியை நடத்தி வருகிறது. இந்நிகழ்ச்சியில் "கல்வி கற்றல்" குறித்து முக்கியத்துவத்தினை வலியுறுத்தி பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் புதுக்கோட்டை மாவட்ட கல்வித்துறை மற்றும் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சார்பில் கலைக்குழுக்கள் வாயிலாக கலை நிகழ்ச்சிகள் 29.09.2021 வரை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இக்கலைக்குழுக்கள் மூலம் பொதுமக்களிடம் எழுத்தறிவை 100 சதவீதம் பரவலாக்கம் செய்வதற்காக கலை வடிவத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகிறது. இதனை அனைவரும் உரிய முறையில் பயன்படுத்தி விழிப்புணர்வு பெற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் சா.சத்தியமூர்த்தி, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாவட்ட உதவி திட்ட அலுவலர் இரவிச்சந்திரன், ஒருங்கிணைப்பாளர் பழனிவேலு, பள்ளித் துணை ஆய்வாளர் மாரிமுத்து மற்றும் அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**